[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைமை மருத்துவ மனையிலும் ஏனைய அரசாங்க மருத்துவ மனைகளிலும் மருத்துவர்கள் இல்லை என்ற குறை இல்லையென்று அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 90 மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடங்களில் 26 இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஊ; நீலகிரி மாவட்டத்தில், புயல், மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை, பாலங்களை செப்பனிடுவது குறித்து.

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"நீலகிரி மாவட்டத்தில் கடந்த புயல் மழையினால் சேதமுற்ற சாலைகள், பாலங்கள் செப்பனிடப்பட வேண்டிய அவசியம் குறித்து".

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் 1978 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத்தின் கீழ் 869 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் உதகமண்டலம் குன்னூர் நகராட்சிப் பணிகளும் அடங்கும். அவற்றுள் 88 பணிகளைத் தவிர மற்ற பணிகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. இந்த 88 பணிகளில் 10 பெரிய பாலப் பணிகளும் அடங்கும். இந்த 10 பாலப் பணிகளில் ஒரு வேலை தவிர மற்ற பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள குன்னூர்—கோத்தகிரி சாலையிலுள்ள ஒரு பெரிய பால வேலை இரயில்வே இலாகாவின் ஒப்புதலை எதிர் நோக்கியுள்ளது.

1979 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத் திட்டத்தில் 183 பணிகள் நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலம் மற்றும் குன்னூர் நகராட்சிப் பணிகள் உட்பட, எடுத்துக் கொள்ளப்பட்டன. எல்லா தற்காலிக நிவாரணப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. எவ்விடத்திலும் போக்குவரத்திற்குத் தடையில்லை. கூடலூர் வட்டாரத்திலுள்ள இரண்டு பெரிய பாலங்கள் தவிர மற்ற எல்லா பணிகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு தற்போது முன்னேற்ற நிலையில் உள்ளன. இவை தவிர நிரந்தர பணிகள் மற்றும் தடுப்பு நிவாரணப் பணிகள் எடுக்கப்பட்டு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. உச்சி : இங்கு ஆரம்பிக்கப்பட்ட பால வேலைகள் துரிதமாக எடுக்கப்பட்டு முடிக்கப்படவில்லை. அதோடு 1978 ஆம் ஆண்டு புயலால் சேதமுற்ற பாலங்களைச் சீரமைக்கும்

1980 பிப்ரவரி 13] [திரு. கே. உச்சி]

வேலைகள் ஆரம்பிக்கப்படவே இல்லை. கூடலூர் பகுதியில் ஓவலில் பெரிய பாலம் ஒன்று ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. உதகை எப்பநாடு சாலை, கூக்கல் சாலை, உதகை எடக்காடூர் சாலையில் இரண்டு பால வேலைகள் ஆரம்பிக்கப்படாமலே இருக்கின்றன. சாலைகள் அத்தனையும் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அவற்றுக்குத் தார் போட கவனம் செலுத்துவ தோடு கூட பல வேலைகளையும் உடனடியாக எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் கொடுத்த பதிலிலேயே பத்துப் பாலப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டேன். இயற்கையின் சீற்றத்தின் காரணமாக நடைபெற்ற சம்பவங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பெரும் வெள்ளத்தைத் தாங்க முடியாது சிறிய பெரிய பாலங்கள் இருந்த இடம் தெரியாமல் அடித்துச் செல்லப்பட்டன. பெரிய பாறைகளாலும் மண் சரிவுகளாலும் சாலைகள் அடைக்கப்பட்டன. பெரிய மரங்கள் நிலைகுலைந்து வேரோடு சாய்ந்தன. உறுப்பினர் அவர்களுக்கு இதெல்லாம தெரியும். துண்டிக்கப்பட்ட போக்குவரத்தை இரவு பகல் எனப் பாராது மழையையும் குளிரையும் பொருட்படுத்தாது நெடுஞ்சாலைத் துறையினர், பாறைகளையும் மண் சரிவுகளையும் மரங்களையும் அப்புறப்படுத்தி குறுகிய காலத்தில் சீர் செய்தனர். இப் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டுமென்ற காரணத்தால் தனித் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகையில் ஆண்டிற்கு ஐந்து மாதத்திற்கு மேலும், நாளொன்றுக்கு ஐந்து மணிக்கு மேலும் பணியாற்றுவது மிகக் கடினம், செய்யவும் இயலாது. தவிர மிகவும் அதிகமான வெள்ளச் சேதப் பணிகளை ஒரே சமயத்தில் எடுத்துச் செய்ய போதிய ஒப்பந்தக்காரர்களும் ஆட்களும் இல்லை. வேலை செய்ய ஆட்கள் மற்ற மாவட்டங் களிலிருந்து வர வேண்டியிருப்பதால் சற்று தாமதம் ஏற்படலாம் எப்படி இருந்தாலும் அந்த வேலைகள் எல்லாம், எனக்குக் கிடைத்த தகவலின்படி, 88 பணிகளில் 48 பணிகள் இந்த மாதத்தில் முடிக்க வேண்டும். எஞ்சிய 40 பணிகளும் 30—6—1980-க்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைகளின் ராணி என்று எல்லாம் வீணாகப் புகழப்படுகிறதே தவிர அங்கே பணிகள் தாமதமாகச் செய்யப்படுகின்றன, ஆகவே அரசு அக்கறை காட்டி வருகிற சீசனுக்குள்ளாக அந்தப் பணி களை முடிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே நல்ல முறையிலே அந்தப் பணிகள் நடக்க வேண்டுமென்ற முறையிலேதான் உதகமண்டலத்தில் தனிக் கோட்டப் பொறியாளர்களும் உதவிக் கோட்டப் பொறியாளர்களும், உதவிப் பொறியாளர்களும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். நல்ல முறையிலே அந்தப் பணிகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் —விவாதம் (தொடர்ச்சி.)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலே சில சொல்ல நான் முன்வருகிறேன். வழக்கமாக இந்த அவையிலே ஆளுநர் உரை மீது நடக்கக்கூடிய விவாதங்கள் பூராவும் தமிழகத்தினுடைய வளர்ச்சி, தமிழகத்திலே நடக்க வேண்டிய ஏனைய பல காரியங்கள், பல விவரங்கள்பற்றித்தான் அதிகமாக இருக்கும், ஆனால் அதற்கு நேர்மாறாக இப்போது விவாதம் வேறு ஒரு விஷயத்திற்குப் போய், பாராளுமன்றத் தேர்தலையொட்டிய பல விவரங்களுக்குச் சென்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலே வேறு ஒரு கட்சி அதிகமான இடங்களைப் பிடித்துவிட்டதன்